**திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை – திரு.வே.சரவணன், இ.ஆ.ப.,**

செ.மு.எண்.தா3 / 4361 /2024–4 நாள்: 10.07.2025

பொருள் **பணியமைப்பு** – தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் – திருச்சிராப்பள்ளி மாவட்டம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு – தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் தேர்வாணையம் – ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளின் தொகுதி II மற்றும் II –A –இல் அடங்கிய நேரடி உதவியாளர் பதவி – பணி நாடுநர்கள் தேர்வு செய்யப்பட்டது – பணி நியமனம் அளிக்கப்பட்டது – பணியில் சேர்ந்து கொண்டது – உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்தல் மற்றும் தகுதிகாண் பருவம் துவக்குதல் – ஆணை வெளியிடுதல்.

பார்வை
1 செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண் 1044/PSD–A2/ 2024, நாள் 31.05.2024.
2 திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.தா3/4361/2024, 1–5, நாள்.20.06.2024.
3 Controller of Examinations, Manonmaniam Sundaranar University, Tirunelveli letter No. MSU/ COE/ GENU/ G2502028/25, Date 12.02.2025.
4. இதர தொடர்புடைய ஆவணங்கள்.

–..–

**உத்தரவு** –

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி II மற்றும் II –A வின் கீழ் தேர்வு செய்யப்பட்டு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகிற்கு நேரடி உதவியாளர் நிலையிலான பணியிடத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு தெரிவு பட்டியல் பார்வை 1–ல் காணும் கடிதம் வழி வரப்பெற்றதனைத் தொடர்ந்து, பார்வை 2–ல் காணும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகளின்படி திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் தற்காலிக பணியமர்வு செய்யப்பட்ட கீழ்காணும் உதவியாளருக்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு இவருக்கெதிரே கலம் (4) – ல் கண்டுள்ள நாளில் இவரது பணியினை உதவியாளர் நிலையில் வரன்முறை செய்தும், அன்றைய நாள் முதல் தமிழ்நாடு அமைச்சுப்பணி பத்திகளின் விதி 32(a)(i)–இன்படி, தொடர்ச்சியான மூன்றாண்டுகளில் ஈராண்டு கால தகுதிகாண் பருவத்தினை துவக்கியும் இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

(த.பி.பா...)

| வ. எண் | பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் (திருவாளர்) | பணியில் சேர்ந்த தேதி | பணிவரன்முறை செய்து தகுதிகாண்பருவம், துவக்கப்படும், நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | M. அமுதா<br>உதவியாளர்,<br>ஊராட்சி ஒன்றியம்,<br>திருவெறும்பூர். | 21.06.2024 முற்பகல் | 21.06.2024 முற்பகல் |

<u>நிபந்தனைகள்</u>

**"The regularization is subject to the outcome of W.A.(MD)No.181 of 2023 & C.M.P (MD) No.2247 of 2023 pending before the Hon'ble Madurai Bench of Madras High Court and other cases if any pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of Madras High Court relating to the recruitment.**

2) இவரது **B.A Degeree** கல்விச் சான்றிதழின் மெய்த்தன்மை அறிக்கை பார்வை – 3 ல் காணும் கடித வழி வரப்பெற்றதனைத் தொடர்ந்து இப்பணி வரன்முறை ஆணை வெளியிடப்பட்டுள்ளது

3) இவர் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 32(a)(i)–இன்படி, மூன்றாண்டுகளில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுவார், இரண்டாண்டு காலத்தில் தகுதி காண் பருவத்தினை பூர்த்தி செய்திட வேண்டும். மேலும், இவர் மனநிறைவளிக்க தக்க வகையில் தகுதிகாண் பருவகாலத்தை பூர்த்தி செய்த பின்னரே பதவி உயர்வுக்கு பரிசீலிக்கப்படுவார்

4) இவர் பவானிசாகர் அரசுப்பணியாளர் பயிற்சி நிறுவனத்தில் அடிப்படை பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் உதவியாளர் நிலை பணியாளர்களுக்கான முதுநிலை பட்டியலின் படி பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கு நடத்தப்படும் அடிப்படை பயிற்சியில் முழுமையாக தேர்ச்சி பெற்ற பின்னரே தகுதிகாண்பருவம் விளம்பி ஆணையிடப்படும்.

5 ) இவர் தகுதிகாண் பருவ காலத்திற்குள்ளாக அரசாணை (நிலை) எண்.33, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 02.03.2017 இன் படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்கான பின்வரும் துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(த.பி.பா...)

| வ. எண் | தாள் குறியீடு | தேர்வின் பெயர் |
|---|---|---|
| 1. | 008 | Department Test for the staff of Rural Development and Panchayat raj department - Tamilnadu Panchayat Act, 1994 & Rules and Constitution of India. |
| 2. | 166 | The Panchayat Development Account Test |
| 3. | 010 | Department Test for the staff of Rural Development and Panchayatraj Department- Scheme Administration. |
| 4. | 172 | The Tamilnadu Government Office Manual Test. |

6 ) மேலும், அரசாணை (எம்.எஸ்) எண்.35 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (பி) துறை, நாள்.15.04.2015–ன் படி Account Test for Sub Ordinate Officers, Part – 1 துறைத்தேர்வினை தகுதிகாண் பருவ காலத்திற்குள் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

| வ. எண் | தாள் குறியீடு | தேர்வின் பெயர் |
|---|---|---|
| 5 | 124 | Account Test for Sub Ordinate Officers, Part – 1 |

7) இவர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் மேற்கண்ட நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளை தனிப்பட்ட காரணங்களினால் அடையத் தவறி தகுதிகாண் பருவம் விளம்ப இயலாத நிலையில் 2016– ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டப்பிரிவு 31–ன் படி பணியிலிருந்து வெளியேற்றப்படுவார்

**மாவட்ட ஆட்சியருக்காக,**
**திருச்சிராப்பள்ளி**

10.7.2025

**பெறுநர்–** திருமதி.M. அமுதா, உதவியாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
திருவெறும்பூர். – **உரிய வழியாக.**

**நகல்** வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ/கி.ஊ),
ஊராட்சி ஒன்றியம்,
திருவெறும்பூர் – (சார்வு செய்து சார்வு நகல் அனுப்பிடும் பொருட்டு)

**நகல்** தா3 இருப்பு கோப்புக்கு.

பே.மு.எண். அ1/0008/2025 ஊராட்சி ஒன்றியம்

நாள் - 22.07.2025 திருவெறும்பூர்.

- தொடர்புடைய அலுவலருக்கு நகல் சார்வு செய்யப்படுகிறது.

BLOCK DEVELOPMENT OFFICER (B.P)
PANCHAYAT UNION
THIRUVERUMBUR

22/07/25

பெறுநர்

திருமதி. M. அமுதா

உதவியாளர்

ஊராட்சி ஒன்றியம்

திருவெறும்பூர்.